1993 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

95-

பாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குதல்.

* 11717-**திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கண்டமங்கலம் ஒன்றியம், பாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பாக்கம் கிராமத்தில், ஒரு கால்நடை மருந்தகம் திறக்க, 23-10-1992 அன்று அரசு உத்தரவு பிறப்பித்தது. அதன்படி 28-10-1992 அன்று அந்த மருததுவமனை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதில் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், ஒரு கால்நடை உதவியாளர் ஆகியோர் பணியில் அமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை ஏற்று கால்நடை மருந்தகம் திறப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். அதே நேரத்தில் மருந்தகத்திற்கு கட்டடம் இல்லாத காரணத்தினால் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்றவாறு அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாக்கம் பற்றிய கேள்வி. வேறு கேள்வி கேட்கக்கூடாது.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்களை அரசு துவங்கும்போது எந்த அடிப்படையில் அந்த இடங்களைத் தேர்வு செய்து மருந்தகங்களைத் தொடங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு முன்னால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கால்நடைகளின் எண்ணிக்கை அங்கேயுள்ள கால்நடைகள் அங்கே ஆரம்பிக்கப்படுகிற மருத்துவமனைக்கு வரவேண்டிய வசதிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்படுகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

96-

மிக முக்கிய பிரமுகர்களுக்காக வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

* 9977-**திரு. கே. செல்வராஜ் :**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் தற்போது மிக முக்கிய பிரமுகர்களுக்கு ஒதுக்குவதற்கான வீடுகள் யாருக்கும் ஒதுக்கித் தரப்படாமல் இடிந்துவிழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த வீடுகள் அவர்களுக்கு ஒதுக்கப்படும்?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS